DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.235/2021**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தாமோதரன் | | : |
| த/பெ | : மோகன் | மதம் | : |
| கிராமம் | : திருமுல்லைவாயில் | தொழில் | : தனியார் நிறுவனம் |
| வட்டம் | : சென்னை | வயது | : 51/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 30.07.2026**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u> PW1**

1. முந்தைய குறுக்கு விசாரணையில் என் அண்ணனுக்கு எழுதி கொடுத்த பத்திரத்தை எடுத்து வருவதாக தெரிவித்திருந்தேன் இன்று இந்த பத்திரத்தை எடுத்து வந்துள்ளேன். நான் ஆஜர் படுத்திய கிரைய பத்திரமானது 01.02.2021 தேதி என் அண்ணன் பெயருக்கு எழுதி வைத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் சான்றிட்ட நகல் **(எ.ம.சா.ஆ.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் பக்கம் 5 ல் என் அண்ணன் Online transaction NEFT மூலம் ரூ.33,00,000/– அனுப்பியதாக காணப்படுகிறது என்றால் சரிதான், அனுப்பினார். அந்த கிரைய பத்திரத்தில் NEFT எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2020 ஆம் ஆண்டில் கார் வைத்திருந்தேன். திருமுல்லைவாயில், இந்திரா நகர் சாய்பாபா கோவில் உள்ளது என்றால் இல்லை. 2020 ஆம் ஆண்டில் திருமுல்லைவாயிலில் வசித்து வந்தேனா என்றால் அங்கு வீடு உள்ளது ஆனால் அந்த வீட்டில் நான் வசிக்கவில்லை. என் அப்பா P.V.மோகன் 1541 சதுரடி கொண்ட சொத்தை 19.02.2016 settlement deed மூலம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அவ்வாறு கிடைத்த சொத்தை LIC finance loan

ல் 12.05.2016 அடமானம் வைத்தேன் என்றால் சரிதான். 2016 ல் அடமானம் வைத்த சொத்தை 23.12.2020 ல் ரூ.9,00,000/– செலுத்தி மீட்டு எடுத்தேன் என்றால் சரிதான். என் அப்பா எழுதி கொடுத்த சொத்தை தவிர வேறு வீடு எதுவும் இல்லை என்றால் சரிதான். 03.12.2016 ஆம் தேதியில் Rishi swadham flats வாங்கியுள்ளேன் என்றால் இல்லை.

2. அந்த flat ஐ Bajaj finance ல் 29.06.2018 தேதியன்று ரூ.33,25,000/– த்திற்கு அடமானம் வைத்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு அடமானம் வைத்த Flat ஐ Bajaj finance ல் இருந்து 21.09.2021 ரூ.33,25,000/– மீட்டு எடுத்தேன் என்றால் சரியல்ல. 11.03.2021 ஆம் தேதி ரூ.28,51,000/– த்திற்கு SBI வங்கியில் அடமானம் வைத்து 16.06.2021 தேதியன்று அசோக்குமார் என்பவருக்கு ரூ.23,00,000/– த்திற்கு விக்கிரையம் செய்து வைத்தேன் என்றால் சரியல்ல. எனக்கு போதிய வருமானம் இல்லை என்பதால் தான் வீட்டை அடமானம் வைத்து அந்த பணத்தை Financial rotation செய்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் இந்தியன் வங்கியில் 2016 ல் திருமுல்லைவாயிலில் வங்கி கணக்கு தொடங்கினேன். அந்த இந்தியன் வங்கியில் திருமுல்லைவாயில் விலாசத்தை தான் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். வங்கியில் திருமுல்லைவாயில் விலாசம் கொடுத்ததால் நான் என் அண்ணனுக்கு வீட்டை விற்பனை செய்யும் வரையில் அந்த முகவரியில் தான் வசித்து வந்தேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக திருமுல்லைவாயில் விலாசத்தில் வசிக்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 24.03.2020 ல் மத்திய அரசு கோவிட் தொற்று காரணமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கபட்டது என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் எனது நிறுவனமும் மூடியிருந்தது என்றால் Maintance department என்பதால் நான் வேலைக்கு சென்றிருந்தேன். எங்கள் நிறுவனமானது Car wheel தயாரிப்பு

செய்யும் வேலை பார்த்து வருகிறது. கோவிட் காலத்தில் எங்கள் நிறுவனம் மூடியிருந்தது என்றால் சரியல்ல. முந்தைய குறுக்கு விசாரணையில் எதிரிக்கு பணத்தை என் தங்கயையின் முன்னிலையில் கொடுத்ததாக தெரிவித்திருந்தேன் என்றால் சரியல்ல, என்னுடன் மூன்று சகோதரர்கள் மட்டும் தான். 20.09.2020 ல் கோவிட் தொற்று காரணமாக பாபா கோவில் மூடியிருந்தது என்றால் சரிதான், அந்த கோவிலில் சேவை செய்வதால் அசிரி, பருப்பு பொதுமக்களுக்கு கொடுத்து வந்தோம்.

3. நான் சொல்லி தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது. வழக்கறிஞர் அறிவிப்பு பு.சா.ஆ.3 ல் பல தவணையில் எதிரிக்கு பணம் கொடுத்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல, ஒரே தவணையில் தான் கொடுத்தேன். பணம் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு முறையே உரிமம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. கடன் கொடுத்ததற்கு முறையே புத்தகம் பராமரித்து வருகிறேனா என்றால் இல்லை. பணம் கொடுத்தற்கு எதிரியிடம் இருந்து கடன் உறுதி சீட்டு எழுதி வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு கடன் கொடுத்து பணம் திருப்பி தரவில்லை என்று உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் ஒரே தவணையில் ரூ.30,00,000/– கடன் கொடுத்தால் அது சட்ட விரோதமான பரிவர்த்தனை என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 12.05.2021 தேதியிட்ட காசோலை எண் 009483 காசோலை வங்கியில் செலுத்தி எதற்காக திருப்பப்பட்டது என்றால் காசோலையில் Overwriting செய்யப்பட்டதாக திருப்பப்பட்டது. அந்த காசோலையை திருத்தம் செய்துள்ள காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் சரியல்ல. என் தங்கை சாந்தி எடுத்து கொடுத்த 2 காசோலையில் ஒரு காசோலை எண் 009483 வங்கியில் செலுத்தி திருப்பப்பட்டதால் மற்றொரு வழக்கின் காசோலை எண் வங்கியில் தாக்கல் செய்துள்ளேன்

என்றால் சரியல்ல, எனக்கு தங்கை இல்லை. வழக்கு காசோலை 17.05.2021 என் வங்கியில் பணமாக்க செலுத்தினேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை Drawer signature differs என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் சரியல்ல, போதிய பணமில்லை என்ற காரணத்திற்காக தான் திருப்பப்பட்டது. இவ்வழக்கு காசோலை 2வது முறை வங்கியில் செலுத்தியபோது Payment stopped drawer என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் சரிதான்.

4. 23.06.2021 அன்று எதிரியின் ஆக்சிஸ் வங்கி கணக்கில் போதிய பணம் இருந்ததாகவும், சாந்தி என்பவர் திருடி கொடுத்த காசோலையை எனது சுயநலத்திற்காக பயன்படுத்தியதால் எதிரியின் வேண்டுகோளுக்கிணங்க ஆக்சிஸ் வங்கி அந்த காசோலையை நிராகரித்தது என்றால் சரியல்ல. செப்டம்பர் 2020 ஆண்டு எனது மாத சம்பளம் ரூ.54,000/- ஆகும். தனிப்பட்ட முறையில் வியாபாரம் ஏதேனும் செய்துவருகிறேனா என்றால் தெரிந்தவர்களுக்கு ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்து வருகிறேன். Plot Marketing வியாபாரம் செய்து வந்தேன். SSLF என்ற Marketing நிறுவனத்தில் கோவிந்தராஜன், சாந்தி, கல்பனா மற்றும் நான் வேலை பார்த்து வந்தோம் என்றால் அவர்கள் யார் என்று தெரியாது நான் மட்டும் தான் வேலை பார்த்தேன். வழக்கறிஞர் கோவிந்தராஜன் மற்றும் தமிழரசி(எதிரி) இடையே உள்ள பிரச்சனை காரணமாக சாந்தி எடுத்து கொடுத்த காசோலையை நான் தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. அன்றைய தேதியில் ரூ.30,00,000/- கடன் தரும் அளவிற்கு எனக்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. கடன் கொடுத்த காலகட்டத்தில் மேற்படி தொகையை என் அண்ணன் வங்கியில் செலுத்தியதற்கான ஆதாரம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல, ஆதாரம் உள்ளது தேவைப்பட்டால் தாக்கல்

செய்கிறேன். செப்டம்பர் 2020 ஆம் ஆண்டில் எனது வங்கி கணக்கில் ரூ.1000/- தான் இருந்தது என்றால் சரியல்ல. நானே எனது வீட்டின் செலவிற்காக என் அப்பா எழுதி கொடுத்த வீடு மற்றும் எனது பெயரில் இருந்த இடத்தை அடமானம் வைத்து பணம் வாங்கி வந்ததால் எதிரிக்கு ரூ.30,00,000/- தரும் அளவிற்கு எனக்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த கிரைய பத்திரத்தில் என் அண்ணனுடன் கிரைய ஒப்பந்தம் போடப்பட்டு பணம் கொடுத்ததாக வாசகம் காணப்படவில்லை என்றால் சரியல்ல, ஒப்பந்தம் போடப்பட்டது. வழக்கறிஞர் கோவிந்தராஜன் மற்றும் சாந்தி மூலம் எதிரியிடம் இருந்து பணம் பறிக்க வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K